Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.168/2025 PW- 3**

Name : பழனி
Father / Husband name : முனுசாமி
Village : தாதாபுரம்
Age : 70
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.03.2026

Accused present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி முருகன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4, 5 வருடத்திற்கு முன்னதாக காவல் நிலையத்திற்கு சொந்த வேலையாக சென்றபோது அங்கு போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 04.08.2021 ந்தேதி இரவு 09.30 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த முருகன் என்பவரும் வழக்கின் சம்பவயிடத்திலிருந்தபோது வெள்ள்ளிமேடுபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை

மகசர் தயாார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் முருகன் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது இருதரப்பிரனும் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.168/2025 PW- 4**

Name : கஜேந்திரன்
Father / Husband name : ரங்கநாதன்
Village : வெள்ளிமேடுபேட்டை
Age : 54
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் ராஜேஷ் அவர்களின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சியம். இந்த வழக்கில் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.08.2021 ந்தேதி 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜேஷ் நிலைய பொறுப்பிலிருந்தபோது காவல் நிலையத்தில் பதிவு செய்து வைத்திருந்த நிலைய சிஎஸ்ஆர் 401/2021 ஐ பார்வையிட்டு அ.சா1 ராமு என்பவர் கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண் 207/2021, U/s 294(b),324,506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 09.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பழனி மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளார். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ

சாட்சிகளான ராமு, துரைராஜன், சுரேஷ்பாபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரியை தேட எதிரி விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றிருந்தார். சாட்சி 2க்கு லேசானக்காயம் என்பதாலும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்பதாலும் வழக்கின் சட்டப்பிரிவுகளான U/s 294(b),324,506(ii) IPC @ U/s 294(b),352,506(ii) IPC ன் படி பிரிவு மாற்றம் செய்துள்ளார். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது U/s 294(b),352,506(ii) IPC படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை விசாரணை அதிகாரி சரிவர விசாரிக்காமல், சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த ஆயுதத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியின் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.